**வெஸ்டர்ன்® யூனியன் மணி டிரான்ஸ்ஃபர் சர்வீசஸ்SM என்பது பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது.**

வெஸ்டர்ன்® யூனியன் மணி டிரான்ஸ்ஃபர் சர்வீசஸ்SM பரிமாற்றங்களை அதாவது பணம் அனுப்புதல் மற்றும் பெறுதல் போன்றவற்றை உலகெங்கும் உள்ள வெஸ்டர்ன்® யூனியன் ஏஜென்ட் லொகேஷன்கள் மூலம் செய்ய முடியும். கீழே பட்டியலிடப்பட்டுள்ள எண்களை அழைத்து அருகிலுள்ள லொகேஷனின் முகவரியை அறியலாம். சில லொகேஷன்கள் 24 மணி நேரமும் திறந்திருக்கும்.

வழக்கமான சில மணி டிரான்ஸ்ஃபர் சேவைகளில் பணம் அனுப்பிய ஒரு சில நிமிடங்களில் அதை பெறுபவர் தனது பணத்தைப் பெற முடியும். இது பணம் வழங்கும் வெஸ்டர்ன் யூனியன் ஏஜென்ட் (ஏஜென்ட்) லொகேஷனின் அலுவல் தொடங்கும் நேரத்திற்கு உட்பட்டது. அடுத்த நாள்/2வது நாள் மற்றும் கணக்கு அடிப்படையிலான டிரான்ஸ்ஃபர் சர்வீஸ்கள் கோரிக்கையின் பேரில் சில குறிப்பிட்ட நாடுகளுக்கு மட்டுமே கிடைக்கிறது. அடுத்த நாள்/2வது நாள் மணி டிரான்ஸ்ஃபர் சர்வீஸைப் பயன்படுத்தி அனுப்பப்படும் பணத்தை முறையே 24 மற்றும் 48 மணி நேரத்தில் பெறலாம். கணக்கு அடிப்படையிலான டிரான்ஸ்ஃபருக்கு பொதுவாக 5 அலுவல் நாட்கள் ஆகும். மொபைல் வாலட்டுகளுக்கு செய்யப்படும் டிரான்ஸ்ஃபர் ஒரு சில நிமிடங்களில் கிடைத்துவிடும். ஒரு சில நாடுகளில் வரம்புக்கு அதிகமாக, ஒழுங்கு முறைகளுக்கு அதிகமாக அல்லது இதர வரம்புகளுக்கு அதிகமாக அனுப்பப்படுவதும் பணத்தின் பரிமாற்றம் தாமதமாகக்கூடும். எந்த ஒரு நோக்கத்திற்காகவும் வெஸ்டர்ன் யூனியன் எந்த ஒரு வங்கியின் பிரதிநிதியாகவும் செயல்படுவதில்லை. மேலும் வங்கியின் சார்ப்பாக பணம் பெறுவதும் இல்லை. மேலும் விவரங்களுக்கு பின்வரும் எண்ணை அழைக்கவும்.

மணி டிரான்ஸ்ஃபருக்கான பணம் பொதுவாக ரொக்கமாகத்தான் வழங்கப்படும். ஆனால் சில ஏஜென்ட்கள் காசோலையிலோ அல்லது ரொக்கம் காசோலை என்ற இரண்டு முறையிலும் அல்லது பணம் பெறுவர் விரும்பும் முறையிலும் பணம் வழங்கலாம். சிலர் தமது வங்கிக் கணக்கில் பணம் பெற விரும்பலாம். ரொக்கமாக பணம் பெற விரும்பினால் பணம் பெறுபவர் முறையான அடையாள ஆவணத்தைத் தர வேண்டும். மேலும் வெஸ்டர்ன் யூனியனுக்கு தேவையான மணி டிரான்ஸ்ஃபர் விவரங்களையும் தர வேண்டியது அவசியம். அதில் எந்த நாட்டிலிருந்து பணம் அனுப்பப்பட்டது, சுமாரான தொகை, எம்டிசிஎன் போன்ற விவரங்கள் அடங்கும். மேலும் ஏஜென்ட் லொகேஷனிற்கு உரிதாகும் இதர நிபந்தனைகள் மற்றும் உண்டு. பணம் அனுப்புபவரின் விருப்பத்திற்கு மாறுபட்ட முறையில் பணம் பெறுபவர் பணத்தை பெற விரும்பினால் அதற்கு பணம் அனுப்புபவர் வெஸ்டர்ன் யூனியனிற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். ரொக்கப் பணப் பரிமாற்றங்களில் பணம் வழங்கும் ஏஜென்ட் பணம் பெறுவரின் அடையாள ஆவணங்களை முறையாக பரிசீலித்த பிறகே பணம் வழங்குவார். பணம் பெறுபவர் பணம் வழங்கும் படிவத்தில் சிறு தவறுகள் செய்திருந்தாலும் அவ்வாறான பணம் வழங்கப்படும். வெஸ்டர்ன் யூனியனோ அல்லது அதன் ஏஜென்டோ பணம் அனுப்பும் படிவத்தையும், பணம் பெறும் படிவத்தையும், பணம் பெறுவர் கொடுத்த முகவரிக்காக, ஒப்பிட்டு பரிசீலிக்க மாட்டார்கள். பணம் பெறும் சில ஊர்களில் பணத்தை ரொக்கமாகப் பெறுவதற்காக பணம் பெறுபவர் அடையாள ஆவணத்தை காட்ட வேண்டும் அல்லது சங்கேத கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும் அல்லது இரண்டையும் செய்ய வேண்டும். சங்கேத கேள்விகள் கூடுதல் பாதுகாப்பு அம்சம் அல்ல. அதை பணம் வழங்க தாமதப்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடாது. மேலும் இது சில நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது

சில தனிநபர்கள் மற்றும் சில நாடுகளுடன் மணி டிரான்ஃபர் சேவை வியாபரம் செய்வதை சில சட்டங்கள் தடை செய்துள்ளன. வெஸ்டர்ன் யூனியன் வியாபாரம் செய்யும் நாடுகள் கொடுத்துள்ள பட்டியிலில் உள்ள பெயர்களை பரிசீலித்தபிறகுதான் டிரான்ஸ்ஃபர் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் அமெரிக்க டிரஷரி டிபார்ட்மெண்ட்ஸ் ஆஃபீஸ் ஆஃப் ஃபாரின் அஸ்ஸட்ஸ் கன்ட்ரோல் (OFAC) மற்றும் யூரோப்பியன் யூனியன் அடங்கும். ஒரு வேளை அந்த பெயர் அந்த பட்டியிலில் உள்ள பெயருடன் பொருந்துவதாக கருதினால், வெஸ்டன் யூனியன் அந்த பட்டியலுடன் ஒப்பிட்டு பரிசீலனை செய்யும்.

ஒரு சில நேரங்களில் வாடிக்கையாளர்களின் கூடுதல் அடையாளங்கள் அல்லது தகவல்கள் தேவைப்படும், இதனால் பரிமாற்றங்கள் தாமதமாகலாம். இது வெஸ்டர்ன் யூனியன் பரிமாற்றங்கள் அனைத்திற்கும் சட்டபூர்வமான தேவை ஆகும். (இதில் அமெரிக்காவில் தொடங்கி அமெரிக்காவிற்கு வெளியில் முடிவடையும் அனைத்து பரிமாற்றங்களும் அடங்கும்).

பரிமாற்றக் கட்டணம் - மணி டிரான்ஸ்ஃபர் செய்வதற்கு பணம் அனுப்புபவரிடம் வெஸ்டர்ன் யூனியன் எப்படி கட்டணம் வசூலிக்கிறது என்ற விவரங்கள் ஏஜென்ட் லொகேஷனில் தெளிவாக வெளியிடப்பட்டிருக்கும் அல்லது பேமெண்ட் ஆர்டரைத் தருவதற்கு முன்னால் அது பணம் அனுப்பவரிடம் காட்டப்பட்டும். எந்த நாட்டிற்கு பணம் அனுப்பப்படுகிறதோ அந்த நாட்டில் உரித்தாகம் சட்டங்களுக்கு வேறு விதமான தேவைகள் இருந்தாலே தவிர அனுப்புபவர்தான் அந்தக் கட்டணத்தை ஏற்க வேண்டும். சில இடங்களில் பணம் அனுப்புவதற்காக கட்டணங்கள் மீது வரிகள் விதிக்கப்படலாம் மற்றும் சேவை கட்டணங்கள் இருக்கலாம்.

அந்நியச் செலாவணி - மணி டிரான்ஸ்ஃபரில் எந்த நாட்டிற்கு பணம் அனுப்பப்படுகிறதோ அந்த நாட்டின் பணம் வழங்கப்படும் (சில நாடுகளில் அமெரிக்க டாலர்களாக அல்லது வேறு ஒரு பணமாக மட்டுமே வழங்கப்படும்). மேலும் பணம் அனுப்புபவர் பணம் பெறுபவரின் உள்ள நாட்டின் பணத்தை எஜென்டிடம் கொடுக்கவில்லை என்றால், ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் உரித்தான கட்டணத்தைத் தவிர, அந்த பணத்தின் அன்றைய அந்நிய செலாவணி விகிதத்தில் வெஸ்டர்ன் யூனியன் மாற்றும். பணப் பரிமாற்றம் செய்யப்படும் நேரத்தில் உள்ள அந்நிய செலாவணி விகிதத்தின் அடிப்படையில் அந்த பணத்தின் தொகையை படிவத்தில் குறிப்பிடும். சில நாடுகளில் பணம் பெறும் தேதியில் உள்ள அந்நிய செலாவணி விகிதத்தில் பணம் வழங்கப்பட வேண்டும் என்ற ஒழுங்குமுறை உள்ளது. அப்படி இருந்தால் பணம் அனுப்பும் தேதியில் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும், பணம் பெறுபவர் அதை பெறும் தேதியில் உள்ள தொகைக்கும் வேறுபாடு இருக்கும். அன்றைய தினத்தில் வங்கிகளுக்கு இடையெ உள்ள வர்த்தகரீதியான அந்நிய செலாவணி விகிதம் மற்றும் தனது லாபத்தையும் சேர்த்த விகிதத்தை வெஸ்டர்ன் யூனியன் கணிக்கும். பெரும்பாலும் அந்நிய செலாவணி விகிதங்கள் உலக நிதிச் சந்தைகளின் முடிவு விகிதப்படி பல முறை விகிதங்கள் மாற்றி அமைக்கப்படும். வங்கிகளுக்கு இடையே மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்கு இடையே பரிமாற்றம் செய்வதற்கு பயன்படுத்துத்துவதற்காக பொதுவாக அறிவிக்கப்பட்ட அந்நிய செலாவணி விகிதத்தைவிட பணப் பரிமாற்ற அந்நியச் செலாவணி விகிதங்கள் அதிகமாக இருக்கலாம். டிரான்ஸ்ஃபருக்கான கட்டணங்களைத் தவிர வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் அந்நிய செலாவணி விகிதம் மற்றும் வெஸ்டர்ன் யூனியன் பெற்ற அந்நியச் செலவணி விகிதத்திற்கு இடையே உள்ள வித்தியாசத்தை வெஸ்டர்ன் யூனியன் வைத்துக் கொள்ளும் (சில இடங்களில் அதன் ஏஜென்டுகள் வைத்துக் கொள்வார்கள்). சில குறிப்பிட்ட நாடுகளுக்கு பணம் அனுப்புவதற்கான அந்நிய செலாவணி விகிதம் பற்றிய கூடுதல் விவரங்களை பெறுவதற்கு பின்வரும் எண்ணை அழைக்கவும் அல்லது எங்கள் இணையதளத்தைக் காணவும்: www.westernunion.com.

பல விதமான பணங்களில் பணம் அனுப்பும் மற்றும் பெறும் நாடுகள்: பணம் அனுப்புபவர் பணம் அனுப்பும் நேரத்தில் எந்த பணத்தை அனுப்ப விரும்புகிறார் என்று தேர்வு செய்ய வேண்டும். பரிமாற்றக் கட்டணம் மற்றும் வெஸ்டர்ன் யூனியன் (அல்லது அதன் ஏஜென்ட்டுகள், மொபைல் ஃபோன் அல்லது கணக்கு வழங்குபவர்) வழங்கப்படுவதற்கு தேர்வு செய்த பணத்தின்படி பணத்தை வழங்குவார். சில நாடுகளில் பணம் அனுப்புபவர் குறிப்பிட்ட பணத்திற்கு பதிலாக வேறு ஒரு பணத்தை பெறும் வசதி உள்ளது பணம் பெறுபவர் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பணத்திற்கு பதிலாக வேறு பணத்தைத் தேர்ந்தெடுத்தால், அதற்காக அந்நியச் செலாவணியாக மாற்றும் போது வெஸ்டர்ன் யூனியன் (அல்லது அதன் ஏஜென்ட்டுகள், மொபைல் ஃபோன் அல்லது கணக்கு வழங்குபவர்) பணம் ஈட்டும்.

சிறப்புச் சேவைகள்

தொலைபேசி அறிக்கைகள். பெரும்பாலான நாடுகளில் பணம் வந்து சேர்ந்ததும், அதை பெறுவருக்கு அது வந்து சேர்ந்ததற்காக தொலைபேசியில் அறிவிப்பு செய்யப்படும். அதற்கு ஒரு கூடுதல் கட்டணம் உண்டு. மெஸ்ஸஞ்சர் டெலிவரி. சில நாடுகளுக்கு காசோலை அல்லது வரைவோலையாக வழங்கப்படும் வசதி உண்டு. இதற்கு கூடுதல் கட்டணம் உண்டு. சப்ளிமென்டல் மெஸ்ஸேஜ் சேவைகள் : பணம் அனுப்பப்படும் பெரும்பாலான நாடுகளில் ஒரு கூடுதல் கட்டணத்தில் இந்த வசதி கிடைக்கிறது.

எஸ்எம்எஸ் - வசதி கிடைக்கிறது. பணம் பெறுபவர் பணத்தைப் பெற்றுக் கொண்டார் என்று பணம் அனுப்பியவருக்கு அல்லது பணம் பெறுபவருக்கு உங்கள் பணம் வந்து சேர்ந்து விட்டது என்று இலவச எஸ்எம்எஸ் அனுப்பும் சேவையை வெஸ்டர்ன் யூனியன் தருகிறது. இதற்காக தொலைபேசி நிறுவனம் வசூலிக்கும் கட்டணத்தை பணம் பெறுபவரோ அல்லது பணம் அனுப்புவரோ மட்டுமே ஏற்க வேண்டும். சட்டம் அனுமதி வழங்கினால் பணம் அனுப்பியவர் மற்றும்/அல்லது பெறுபவர் கொடுத்துள்ள மொபைல் எண்ணிற்கு எஸ்எம்எஸ் அனுப்பப்படும். டெலிவரிக்கான எஸ்எம்எஸ் மெஸ்ஸேஜுகளை வெஸ்டன் யூனியன் தேர்வு பார்ட்டி கேட்வே மூலம் அனுப்பும். வராத எஸ்எம்எஸ்-களுக்கு அல்லது வெஸ்டர்ன் யூனியன் சிஸ்டத்திற்கு அப்பாற்பட்ட தொழில் நுட்பக் கோளாறுகளுக்கு வெஸ்டர்ன் யூனியன் பொறுப்பாகாது.

கணக்கு அடிப்படையிலான டிரான்ஸ்ஃபர்கள் - இவ்வசதி கிடைக்கும் இடங்களில் பணம் பெறுபவர் அந்த தொகையை தனது மொபைல் ஃபோனில் அல்லது வங்கி அல்லது இதரக் கணக்கில் பெறுவதற்கு கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும். இது பணம் பெறும் நாட்டின் பணமாக அக்கணக்கில் சேர்க்கப்படும். இல்லை என்றால் பணத்தைபெறும் நிறுவனம் அதை தனக்கே உரிய அந்நியச் செலாவணி விகிதத்தில் மாற்றிக் கொள்ளும் அல்லது பரிமாற்றத்தை ஏற்காது. மொபைல் ஃபோன் சர்வீஸ், எம்வாலட், வங்கி அல்லது இதர கணக்கு வசதி தருபவருடன் பணம் பெறுவருக்கு உள்ள ஒப்பந்தத்தின்படி அதன் உரிமையை, பொறுப்பை, கட்டணத்தை நிதி இருப்பை மற்றும் கணக்கு வரம்பை தீர்மானிக்கும். கொடுக்கப்பட்டுள்ள கணக்கு எண் (மொபைல் கணக்குகளுக்கான மொபைல் ஃபோன் எண்கள் உட்பட) பெறுபவருக்கு உரித்தானதாக இல்லாவிட்டால், பணம் அனுப்பியவர் குறிப்பிட்ட கணக்கில் தொகை சேர்க்கப்படும். கணக்கைப் பயன்படுத்த கட்டணம் வசூலிப்பதன் மூலம் வெஸ்டர்ன் யூனியன் பணம் ஈட்டக்கூடும். உள்ளூர் பணமல்லாத வேறு பணமாக மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் அந்நிய செலாவணி விகிதம், நடவடிக்கைகள் அல்லது பணம் பெறும் நாட்டில் உள்ள தவறுகள் அல்லது நிதிச் சேவை தரும் இதர நிறுவனங்கள் போன்றவற்றிற்கு வெஸ்டர்ன் யூனியன் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

ரீஃபண்டு - 45 நாட்களுக்குள் பணம் பெறுபவர் பணத்தைப் பெறவில்லை என்றாலோ அல்லது அது அவரது கணக்கில் சேர்க்கப்படவில்லை என்றாலோ வெஸ்டர்ன் யூனியன் மணி டிரான்ஸ்ஃபரின் அசல் தொகை தொகையை (இதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பணத்தை ரீஃபண்டு செய்யும் நேரத்தில் உள்ள அந்நியச் செலாவணியின் விகிதத்திபடி) வெஸ்டர்ன் யூனியன் பணம் அனுப்பியவருக்குத் திரும்ப வழங்கும். இச்சேவைக்கு விதித்துள்ள குறிப்பிட்ட காலத்திற்குள் பணம் பெறுபவருக்கு மணி டிரான்ஸ்ஃபர் சேவை தரப்படவில்லை என்றால் பணம் அனுப்பியவரின் எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில் டிரான்ஸ்ஃபர் கட்டணம் திரும்ப வழங்கப்படும். இதற்கு அலுவல் நேரம், பணம் வழங்க தேர்வு செய்யப்பட்ட லொகேஷனில் பண இருப்பு, இதர நிபந்தனைகள் உரித்தாகும். இதில் வெஸ்டர்ன் யூனியன் அல்லது அதன் ஏஜென்ட்டுகளின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமைகள், அதாவது மோசமான வானிலை அல்லது தொலைத் தொடர்பு கோளாறு போன்றவை அடங்கும். பணம் அனுப்புபவரின் கோரிக்கையின் பேரில் டிரான்ஸ்ஃபர் நிறுத்தப்பட்டால் டிரான்ஸ்ஃபர் கட்டணம் திரும்ப வழங்கப்படமாட்டாது. அமெரிக்க அல்லது இதர உரித்தாகும் சட்டங்களுக்கு உட்பட்டு சில மணி டிரான்ஸ்ஃபர்கள் தாமதமாகலாம். பணம் அனுப்பிய ஓர் ஆண்டிற்குள் பணம் பெறப்படவில்லை என்றால் அனுப்பப்பட்ட பணத்திலிருந்து வெஸ்டர்ன்

யூனியன் நிர்வாகக் கட்டணத்தை பிடித்துக் கொள்ளும்.

பொறுப்புகள் - வெஸ்டன் யூனியன் மணி டிரான்ஸ்ஃபர் மூலம் கட்டண முறையில் அனுப்பப்படும் சரக்குகளுக்கு அல்லது சேவைகளுக்கான டெலிவரிக்கு வெஸ்டர்ன் யூனியன் உத்தரவாதம் வழங்குவதில்லை. பணம் அனுப்புபவரின் ரகசிய தகவல்களை பணம் பெறுபவரைத் தவிர வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ளப்படமாட்டாது. பணம் அனுப்புபவர் முன்பின் தெரியாத எவருக்கும் பணம் அனுப்பக்கூடாது என்று எச்சரிக்கப்படுகிறார். பணம் அனுப்பியவர் தனது பணப் பரிமாற்ற ரகசியத் தகவல்களை பணம் அனுப்புபவரைத் தவிர வேறு ஒருவருக்கு சொன்னால் அதற்கு வெஸ்டர்ன் யூனியன் அல்லது அதன் ஏஜென்ட்டுகள் எவ்விதத்திலும் பொறுப்பேற்க மாட்டார்கள். பணம் வழங்காததற்கு அல்லது குறைவாக பணம் வழங்கியதற்கு அல்லது தனது பணியாளர்கள் அல்லது ஏஜென்டுகளின் தவறால் அல்லது வேறு காரணங்களால் சப்ளிமெண்டல் மெஸ்ஸேஜ் வராதது போன்றவற்றிற்கான டேமேஜ்களுக்கு அமெரிக்க டாலர் 500க்கும் அதிகமாக வெஸ்டர்ன் யூனியன் அல்லது ஏஜென்ட்டுகள் பொறுப்பேற்க மாட்டார்கள் (இது அனுப்பப்பட்ட தொகை மற்றும் பரிமாற்ற கட்டணத்தைத் தவிர) மறைமுகமான, சிறப்பு, அல்லது சிறிய அல்லது தொடர்பான சேதங்களுக்கு வெஸ்டர்ன் யூனியனோ அல்லது ஏஜென்ட்டுகளோ பொறுப்பேற்க மாட்டார்கள். பொறுப்புகள் செல்லாத நாடுகளில் வெஸ்டர்ன் யூனியன் அல்லது அதன் ஏஜென்ட்டுகளின் தவறுகளால் அல்லது சர்வதேச மோசமான நடத்தைகளால் மேலே சொன்ன மறுப்புகள் செல்லுபடியாகாது.

ஏஜென்ட் காசோலை, வரைவோலை, கிரெடிட் அல்லது டெபிட் கார்டு அல்லது ரொக்கமற்ற முறையில் பணத்தைப் பெற்றால், வெஸ்டர்ன் யூனியனோ அதன் ஏஜென்ட்டுகளோ, அந்த பணம் வழங்கும் முறையை ஏற்க முடியாமல் போனாலோ, அவ்வாறு பணம் வழங்க இயலாததால் ஏற்படும் இழப்புகளுக்கு ஈடு வழங்க பொறுப்பேற்க மாட்டார்கள். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது வழங்கப்படும் சேவைகளை முன்னறிவிப்பின்றி மாற்றி அமைக்கும் உரிமை வெஸ்டர்ன் யூனியனிற்கு உண்டு. வெஸ்டர்ன் யூனியனோ அல்லது அதன் ஏஜென்ட்டுகளோ எவர் ஒருவருக்கும் சேவை வழங்குவதற்கு மறுக்கலாம்.

தகவல் பாதுகாப்பு - உங்கள் சுய தகவல்கள் உரித்தாகும் சட்டங்களின் கீழ் பரிசிலீக்கப்பட்டு வெஸ்டர்ன் யூனியனால் கட்டுப்படுத்தப்படுகிறது. நீங்கள் கொடுத்த உங்கள் சுய தகவல்களையும், அதோடு வர்த்தகத்தாலும், சேவைகளினாலும் பெறப்பட்ட தகவல்களை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். இதில் மணி டிரான்ஸ்ஃபர்ஸ், பில் பேமெண்ட், லாயல்ட்டி அல்லது இதர மெம்பர்ஷிப் திட்டங்களில், முந்தைய சேவைகளின் தகவல்கள் மற்றும் மார்க்கெட்டிங் சாய்ஸ்களின் தகவல்களும் அடங்கும். இந்த தகவல்கள் மூலம் நாங்கள் உங்களுக்கு தேவையான சேவைகளையும் நடவடிக்கைகளையும் தருகிறோம். அதாவது நிர்வாகம், வாடிக்கையாளர் சேவை, பணப் பதுக்கல், சட்டபூர்வமான செயல்பாடுகள், உங்கள் தகவல்களின் பரிசீலனை, அத்ததகவல்களை பயன்படுத்தி ஆய்வுகள் செய்தல், மற்றும் மோசடையை தடுத்தல் அல்லது அதை கண்டுபிடித்தல், டெப்ட் மற்றும் திருட்டு போன்றவற்றை தடுத்தல் மேலும் எங்கள் சேவைகள், திட்டங்கள் மற்றும் இயக்கங்களை மேம்படுத்துதல், உங்கள் விருப்பமான சேவைகளை தருதல், உங்களுக்கு வர்த்தக செய்திகளை மின்னஞ்சல், தொலலிபேசி, எஸ்எம்எஸ் அல்லது வேறுவிதமான முறைகள் மூலம் அனுப்புதல் போன்றவை அடங்கும்.

வெஸ்டர்ன் யூனியனுடன் செயல்படும் இதர நிறுவனங்களுடன் அல்லது இதர திட்டங்கள் மற்றும் சேவைகளின் தகவல்களை நீங்கள் பதிவு செய்துள்ள ரிவார்டு திட்டங்களுக்காக அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும். தகவல்கள் இந்த பிரிவில் கொடுத்துள்ள எந்த ஒரு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். நீங்கள் பணம் பெறுபவர் உட்பட மற்றவர்களைப் பற்றி கொடுக்கும் தகவல்களை நாங்கள் பதிவு செய்து தக்க வைத்து அதை பரிமாற்றத்தை செயல்படுத்துவதற்காக பயன்படுத்துவோம். இத்தகவல்களைக் கொடுக்கும் முன்பு, இந்த பிரிவில் கொடுத்துள்ள தகவல்களை பற்றி அந்த நபர்களுக்குத் தெரிவித்து அவற்றைப் பயன்படுத்த அவர்களது அங்கீகாரத்தைப் பெற வேண்டியது அவசியம். இந்த தகவல்கள் ஒரு விருப்பத் தேவு மட்டுமே. ஆனால் பரிமாற்றத்தை முடிப்பதற்கான

தகவல்களை கட்டாயம் கொடுக்க வேண்டும். அந்த தகவல்கள் இல்லாமல் வெஸ்டர்ன் யூனியன் நிறுவனத்தால் மணி டிரான்ஸ்ஃபர் அல்லது பணம் வழங்கு சேவைகள், வசதி நடவடிக்கைகள் அல்லது கோரப்பட்ட சேவைகளை செயல்படுத்த முடியாது.

எந்த நாட்டில் தகவல்கள் பெறப்பட்டு உருவாக்கபட்டதோ அத்தகவல்களை வேறு நாடுகளில் உள்ள நிறுவனங்களுக்கு நாங்கள் வழங்கலாம். இதில் அமெரிக்காவில் இருக்கும் எங்கள் இணை நிறுவனங்களும் அடங்கலாம். இவை அனைத்தும் மேலே உள்ள பிரிவில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டும். அனுப்பப்படும் இத்தகவல்களில் சுய அடையாளம், தொடர்பு விவரங்களில், மணி டிரான்ஸ்ஃபர் பற்றிய விவரங்கள் மற்றும் நீங்கள் கொடுத்துள்ள இதர விவரங்கள் அடங்கும். எங்கள் வர்த்தகத்தை இயக்க உதவும் இதர நிறுவனங்கள் உட்பட மற்ற நிறுவனங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு நாங்கள் இத்தகவல்களைக் கொடுக்கலாம். அதுவும் அவற்றை கொடுப்பதற்கு ஒரு நியாயமான தேவை இருந்தால் மட்டுமே. மேலும் இதில் மணி டிரான்ஸ்ஃபர் செய்வதற்கான அவசியம், எதிர்கால சேவைகள் அல்லது இப்பிரிவில் கொடுகப்பட்டுள்ள காரணங்களின் நோக்கங்களுக்காக மட்டுமே. நீங்கள் கொடுக்கும் தகவல்களுடன் இதர பிசினஸ்கள் அல்லது தனிநபர்கள் கொடுக்கும் தகவல்களுடன் ஒப்பிட்டு உங்களது விவரங்கள் எவ்வளவு துல்லியமானது என்பதை பரிசீலிப்போம். நீங்கள் கொடுத்த தகவல்கள் அதாவது பெயர், வாடிக்கையாளர் ஐடி எண், முகவரி மற்றும் வங்கி தகவல்கள் அனைத்தையும் வெஸ்டர்ன் யூனியன் அல்லது உலகெங்கும் உள்ள அதன் இணை நிறுவனங்கள் பின்வரும் நோக்கங்களுக்காக பகிர்ந்து கொள்ளும் : (1) உள்நாட்டு அல்லது வெளி நாட்டு சட்டங்களின் படி அல்லது சட்ட பூர்வமான செயல்பாடுகளுக்காக அவ்வாறு செய்வதற்கு கோரப்பட்டால் (2) சட்ட பூர்வமான அமைப்புகளுக்கு அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கு (இந்த நாட்டில், அமெரிக்காவில் அல்லது வேறு ஒரு நாட்டில்) வழங்கப்படும். இது பணப் பதுக்கல், குற்றங்கள், குற்றம் சார்ந்த நடவடிக்கைகள் போன்றவற்றை கண்டுபிடிப்பதற்கு அவற்றை தடுப்பதற்காக. மேலும் இதைப் பெறுபவர்கள் இது சார்பான இதர நோக்கங்களுக்காக இந்த தகவலை மேலும் பலருக்கு வெளியிடலாம்.

உங்கள் தகவல்களின் நகலை நீங்கள் பெறலாம் இதற்காக ஒரு சிறு கட்டணம் வசூலிக்கப்படும். உங்கள் தகவல்கள் முழுமையாக இல்லாவிட்டாலோ, தவறாக இருந்தாலோ, பழையதாக இருந்தாலோ அவற்றை நீங்கள் திருத்தலாம், அழிக்கலாம் அல்லது அந்த தகவல்களை பயன்படுத்துதலை கட்டுப்படுத்தலாம். இந்த தகவல்கள் சேவையை தருவதற்கு அவசியமில்லாவிட்டால் எப்போது வேண்டுமானாலும் ஒரு நியாயமான காரணத்திற்காக அல்லது சட்டம் அல்லது ஒழுங்கு முறைக்கு உட்பட்டு அவற்றை பயன்படுத்தவிடாமல் கட்டுப்படுத்த முடியும். இந்த உரிமைகளை நீங்கள் பயன்படுத்த விரும்பினால், வெஸ்டர்ன் யூனியனிடமிருந்து வர்த்தக செய்திகளை நீங்கள் பெற விரும்பாவிட்டால், பின்னே கொடுக்கப்பட்டுள்ள வெஸ்டர்ன் யூனியன் எண்களை அழைத்து சொல்லவும்.

தொடர்பு மற்றும் கஸ்டமர் ரிலேஷன்ஸ் - எங்கள் ஒப்பந்தம் பணம் அனுப்புபவருடன் மட்டுமே. வேறு எவருடனும் எங்களுக்கு ஒப்பந்தம் இல்லை. அதாவது பணம் அனுப்புபவருக்கு ஒரு சேவையாக மட்டுமே. எங்கள் சேவையில் உங்களுக்கு திருப்தி இல்லை என்றால் பின்வரும் தொலைபேசி எண்ணில் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பிரச்சினைகளை எங்கள் பிரதிநிதி விசாரித்து அதை நியாயமாகவும், விரைவாகவும் தீர்த்து வைப்பார்.

வெஸ்டர்ன் யூனியன் மணி டிரான்ஸ்ஃபர் சர்வீஸ் என்பது அமெரிக்க நிறுவனமான வெஸ்டர்ன் யூனியன் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் இன்க், (வர்த்தக சேவை பரிமாற்றங்களுக்காக) மற்றும் ஐரிஷ் நிறுவனமான வெஸ்டர்ன் யூனியன் இன்டர்நேஷனல் லிமிடெட் (மணி டிரான்ஸ்ஃபருக்காக) வழங்கும் சேவை ஆகும். இது அங்கீகாரம் பெற்ற ஏஜென்ட்டுகளின் நெட்வொர்க் மற்றும் பிரதிநிதிகள் மூலம் வழங்கப்படுகிறது

நகலுரிமை 2011-2017 வெஸ்டர்ன் ஹோல்டிங்க் இன்க். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. அக்டோபர் 2017ல் மாற்றி அமைக்கப்பட்டது.